எடுத்துரைத்திருக்கிறார்கள். நேற்றையதினம் திரு. ரவிக்குமார் அவர்களும், அவருடைய கட்சியின் தலைவர் திரு. திருமாவளவன் அவர்களும் என்னைச் சந்தித்து, சிதம்பரம் வட்டாரத்திலே நடைபெறுகின்ற இந்தத் தீ விபத்துகளைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கின்றார்கள். அப்பொழுது, இன்றைக்குச் சொன்னதுபோல், '2,000 ரூபாய் நஷ்ட ஈடு போதாது; அதை அதிகப்படுத்தித் தரவேண்டும்' என்று சொன்னார்கள். இவற்றைப் பற்றியெல்லாம் அரசு தீர விசாரித்து, ஆலோசித்து, நல்ல முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தீ விபத்துகள் சிதம்பரம் வட்டாரத்திலே இப்படித் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கு என்ன காரணம் என்பதை அறியுமாறு போலீஸ் அதிகாரிகளுக்கும், உயரதிகாரிகளுக்கும் உத்தரவிடுவதற்கும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஏ) பெண்ணாகரம் ஒன்றியம், நாகதாசம்பட்டி, பட்டாசுத் தொழிற்சாலை விபத்தில் மரணமடைந்தவர் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையெட்டு வள்ளல்களிலே முதல் வள்ளலாக விளங்கிக் கொண்டிருக்கின்ற தமிழினத்தினுடைய தலைவரும், தமிழகத்தினுடைய பொற்கால ஆட்சியினுடைய கதாநாயகருமான தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, இன்றைக்குத் தமிழகத்தில் பலனடையாத எந்தவொரு தனி மனிதனும் இல்லையென்ற அளவிற்குப் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற தலைவருடைய ஆட்சியிலே, பெண்ணாகரம் ஒன்றியத்திலே, நாகதாசம்பட்டி என்ற கிராமத்திலே உள்ள ஒரு சிறிய பட்டாசுத் தொழிற்சாலையிலே ஏற்பட்ட தீ விபத்தினால் ஒரு பெண்மணி இறந்துவிட்டார். தலைவர் அறிவித்திருக்கின்ற அந்த உதவியை அந்தப் பெண்மணிக்கும் நல்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஒருவர் விபத்திலே இறந்துவிட்ட செய்தியைச் சொல்வதற்கும், அவர்களுக்கு நிதி

கிடைக்குமா என்பதைக் கேட்பதற்கும் இவ்வளவு நேரம் என்னைப் புகழ வேண்டிய அவசியமில்லை.

முற்பகல் 10–05

நான் குறிப்பாக இந்த அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் அல்ல. உரிமையோடு சொல்லக்கூடியளவிற்கு உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், தோழமைக் கட்சியினுடைய உறுப்பினர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வதெல்லாம், உங்களுக்குக் கொடுக்கப்படுகிற நேரமே குறைவு. அதிலே, எங்களைப் புகழ்வதற்கு நீங்கள் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டால் யாருக்கும் பயனில்லை. "இந்திரனே, சந்திரனே" என்றெல்லாம் புகழ்ந்து பேசுவதால், காரியம் ஒன்றும் நடந்துவிடாது. இப்படி அதிகமாகப் புகழ்ந்து பேசினால், அவர்களை அவைக்கே வராமல்கூட செய்து விடுகின்ற கட்சிகளெல்லாம் நாட்டிலே இருக்கின்றன. ஆகவே, தயவுசெய்து, என்னையோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்களையோ நீங்கள் புகழ்வதை, ஏதாவது சந்தர்ப்பம் வந்தால் மாத்திரம் வைத்துக்கொள்ளுங்கள். எப்பொழுதும், ஒரு கேள்வியைக் கேட்கும்பொழுதுகூட, "உலகப் புகழ்பெற்ற, உலகத் தமிழர்களின் தலைவராக இருக்கின்ற கலைஞர் அவர்களே," என்று கேட்டு, "எங்கள் ஊரில் ஒரு பாலம் கட்டப்படுமா" என்று கேட்பதற்கெல்லாம் எங்களைப் புகழவேண்டிய அவசியம் இல்லை என்பதை மிகத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) திருவெறும்பூர் தொகுதி, செந்தனைபுரம், தனியார் எரிசாராய ஆலை விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகரன், விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதியில், செந்தனைபுரத்தில், எரிசாராயம் மற்றும் ஸ்பிரிட் தயாரிக்கின்ற Tiruchi Distilleries and Chemicals என்கின்ற ஒரு தனியார் ஆலை இயங்கி வருகிறது. கடந்த 9 ஆம் தேதி, மதியம் 12.15 மணியளவிலே, அங்கே பராமரிப்புப் பணிகள் நடைப்பெற்றபொழுது, சரவணன், ராஜேஷ், ஜான் கென்னடி, சலீம் மற்றும் செந்தில்குமார் என்கின்ற 5 பேர் பழுதடைந்த பாய்லரை அகற்றுகின்ற பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.